தினமணி
11 SEP 2020
நாள்:

# கணித ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை தொடக்கம்

**சென்னை, செப். 10:** சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பணியாற்றும் கணித ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்த பயிற்சிப் பட்டறை வியாழக்கிழமை தொடங்கியது.

-7-

மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் சீர்மிகு நகரத் திட்டத்தின் மாதிரி மாநகராட்சிப் பள்ளிகள் திட்டத்தின் மூலம் மாநகராட்சிப் பள்ளிகளில் தரமான உள்கட்டமைப்புடைய வகுப்பறைகள், கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான நவீன வகுப்பறைகள், பள்ளிகளில் மேம்பட்ட விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கோடம்பாக்கம் மண்டலத்துக்கு உள்பட்ட சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக மாநகராட்சி தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் கணித ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறையை மாநகராட்சி ஆணையர் கோ.பிரகாஷ் தொடங்கிவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மண்டல அலுவலர் திருமுருகன், உதவிக் கல்வி அலுவலர்கள் முனியன், நளினா குமாரி, சைதாப்பேட்டை மாநகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளி முதல்வர் பத்மஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.